

# பவளவிழா ஆண்டில்... அண்ணா கண்ட தி.மு.க.!

5 ஆம் பக்கத் தொடர்ச்சி



சென்னை மாநிலத்திற்கு ‘தமிழ்நாடு’ எனும் பெயர் மாற்றம் செய்யும் தீர்மானம் பேரவையில் கொண்டு வந்து நிறைவேற்றினார், அண்ணா!

அப்போதைய ஆட்சியாளர்களிடம் சென்னை மாநிலத்திற்கு ‘தமிழ்நாடு’ என்று பெயர் வைத்திட வேண்டும் என்று தியாகி சங்கரலிங்கனார் அவர்கள் கோரிக்கை வைத்து 75 நாட்கள் உண்ணா விரதம் இருந்து உயிர்த்தியாகம் செய்தார்.

அந்தக் கோரிக்கைக்கும், போராட்டத்திற்கும் செவி சாய்க்கவில்லை அப்போதைய அரசு, பின்னர் தி.மு.க. கழகம் ஆட்சி என்ற அரியணையில் ஏறியது. அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். ‘மெட்ராஸ் ஸ்டேட்’ சென்னை மாநிலத்திற்கு ‘தமிழ் நாடு’ என்று பெயர் மாற்றம் செய்ய வலியுறுத்தி சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றினார்.

தமிழ்நாட்டில் ஏற்கனவே நடைபெற்ற திருமணங்கள் மட்டுமல்ல இனி நடக்கும் சுயமரியாதைத் திருமணங்களும் சட்டப்பூர்வ அங்கீகாரம் பெற 28.11.1967 ஆம் ஆண்டு சட்டப் பேரவையில் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றினார் அண்ணா.

தமிழ்நாடு அரசின் சின்னத்தில் தேவநாகரி எழுத்தில் ‘சத்தியமே ஜெயதே’ என்ற வாசகத்தை ‘வாய்மையே வெல்லும்’ என்று தமிழ் மாற்றம் செய்து ஆணையிட்டார் பேரறிஞர் அண்ணா.

14.4.1968 ஆம் நாள் பேரறிஞர் அண்ணா அவர்கள் “தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்” என்று பெயர்ப் பலகை திறந்துவைத்தார். அந்தப் பெயர் பலகைதான் இன்றும் கோட்டைக் கொத்தள கட்டிடத்தின் முகப்பில் கம்பீரமாக அழகு தமிழில் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன. (அதே கோட்டை கொத்தளத்தின் முகப்பில் இருக்கும் தமிழ்நாடு அரசு தலைமை அலுவலகத்தின் கம்பீரத் தோற்றத்திற்கு மேலும் கம்பீரத்தை ஊட்டும் வகையில் “தமிழ் வாழ்க” என்ற வாசகம் அமைக்கப்பட்டது.

1949 ஆம் ஆண்டு தி.மு.கழகத்தை பேரறிஞர் அண்ணா ஆரம்பித்து 1967 ஆம் ஆண்டு ஆட்சிக் கட்டிலில் தி.மு.கழகத்தை அமரவைத்தார். அப்போது அவரது உடல் நலம் குன்றிய போது திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் வருகை தந்து நலம் விசாரித்தார். பேரறிஞர் அண்ணா அவர்கள் 1969 ஆம் ஆண்டு பிப்ரவரி 3 ஆம் தேதி நம்மை எல்லாம் விட்டுப் பிரிந்தாலும் நம் உள்ளத்திலும், நம் நினைவிலும் என்றென்றும் வீற்றிருக்கிறார். பேரறிஞர் அண்ணா அவர்களின் தி.மு.கழகத்தின் கொள்கை,மக்கள் நலத் திட்டப் பணிகள் செய்யும் பயணத்தை கலைஞர் அவர்கள் முன்னெடுத்து தொடர்ந்தார்.

கலைஞர் ஆட்சியில் எத்தனை திட்டங்கள், தி.மு.கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்டன. விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், கைரிக்ஷா ஒழிப்பு, கண்ணொளி வழங்கும் திட்டம், இரவலர் மறு வாழ்வுத் திட்டம், குடிசை மாற்று வாரியம் மூலம் குடிசையில்லா தமிழ்நாட்டினை உருவாக்குதல், நில உச்ச வரம்பு சட்டத்தின் மூலம் லட்சக்கணக்கான விவசாயிகளுக்கு நிலம் வழங்குதல், விவசாயிகளுக்கு கூட்டுறவுக் கடன் 7000 கோடி ரூபாய் ரத்து, மகளிர்க்கு சொத்தில் சமஉரிமை, உள்ளாட்சியில், அரசு அலுவலகங்களில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு, மகப்பேறு நிதி உதவித் திட்டம், திருமண நிதி உதவித் திட்டம், மகளிர் சொந்தக் காலில் நின்றிட மகளிர் சுய உதவிக் குழுக்கள், தந்தை பெரியார் சமத்துவ புரங்கள், அண்ணா நூற்றாண்டு நூலகம், அய்யன் வள்ளுவருக்கு வானுயர 133 அடியில் அமையப் பெற்ற திருவள்ளுவர் சிலை சுனாமி பேரலையிலும் கம்பீரமாக நின்று இன்றும் கம்பீர மாக காட்சியளித்துக் கொண்டு தமிழ்நாட்டிற்கு, குமரி முனைக்கு பெருமை சேர்த்துக் கொண்டிருக்கும் வானுயர அய்யன் வள்ளுவர் சிலை!

மருத்துவம், இன்ஜினியரிங் படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வு முறை ரத்து, பெண்கள் கல்லூரி வரைச் சென்று படிக்க இலவசக் கல்வி, ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, விவசாயிகளுக்கு இலவச பம்பு செட் மோட்டார் வழங்குதல், தமிழ் மொழிக்கு செம்மொழி அங்கீகாரம், தந்தை பெரியார் நெஞ்சில் தைத்த முள், அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகவேண்டும் என்பது. அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகும் உரிமையை சட்டமியற்றி நிலைநாட்டினார் கலைஞர்.

பேரறிஞர் அண்ணாவிற்குப் பிறகு தி.மு.க. ஆட்சியை தமிழ்நாட்டில் 5 முறை அமைத்தார் கலைஞர்! இந்த ஐந்து முறை ஆட்சியிலும் தமிழ்நாட்டில் ஏழை எளிய மக்கள் ஏற்றம் பெற்றனர். பட்டியலின மக்கள் மேன்மை கண்டனர். உயர் பதவிகளில் பட்டியலின மக்கள் அமர்ந்து; தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடி மாநிலமாக திகழ்ந்து கொண்டிருக்கின்றன.




கலைஞர் வடித்திட்ட தி.மு.க. தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயம்!

இதோ தி.மு.கழகத்தின் மூன்றாம் தலைமுறையாக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் 28.8.2018 அன்று தி.மு.கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்றார். தலைவராகப் பொறுப்பேற்ற மூன்று ஆண்டுகளில் தி.மு.கழகத்தை 6வது முறை ஆட்சி கட்டிலில் அமர வைத்தப் பெருமை முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களையே சாரும்.

ஆட்சி பொறுப்பேற்றதும் பேரறிஞர் அண்ணா வழியில், கலைஞர் வழியில் திட்டங்களைத் தீட்டினார். எவரும் எதிர்ப்பார்க்காத திட்டங்கள் அவை. எவரும் செயல்படுத்த முடியாத திட்டங்கள் அவை,

அரசுப் பேருந்துகளில் மகளிர் இலவசமாக பயணம் மேற்கொள்ளலாம் என்ற திட்டம். பெண்களுக்கு மாதந்தோறும் ரூபாய் ஆயிரம் வழங்கும் கலைஞர் உரிமைத் தொகைத் திட்டம், கல்லூரி மாணவிகளுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப் பெண் திட்டம், கல்லூரி மாணவர்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் தமிழ்ப் புதல்வன் திட்டம், சிறார்களுக்கு காலை உணவுத் திட்டம், பத்திரிகையாளர் நல வாரியம், வருமுன் காப்போம், மக்களைத்தேடி மருத்துவம், கொரோனா காலத்தில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூபாய் நான்காயிரம் நிதி உதவி, தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இம் முதலீடுகளை கொண்டு வர துபாய், ஸ்பெயின், அமெரிக்கா, ஜப்பான் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களே நேரில் சென்று முதலீட்டாளர்களை சந்தித்து தமிழ்நாட்டில் தொழில் தொடங்கிட அழைப்பு விடுத்தார். அதன் மூலம் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் முதலீடுகள் தமிழ்நாட்டில் குவிந்ததன் மூலம் பெருவாரியான தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தி.மு.கழக அரசின் மக்கள் நலத்திட்டங்கள் பேரறிஞர் அண்ணா, கலைஞர் கண்ட கனவை நனவாக்கும் வகையில் தொடருகின்றன.

தி.மு.கழகம் பொன்விழா, மணி விழா கடந்து இன்று பவள விழாவில் அடியெடுத்து வைக்கிறது!

அண்ணா கண்ட தி.மு.க. நாளை முத்து விழா, நூற்றாண்டு விழா என்று தி.மு.கழகம் தொடர்ந்து கொண்டே இருக்க, இருக்க... தமிழ் நாட்டின் வளர்ச்சியும், அசுர வளர்ச்சியாக வளர்ந்து கொண்டே இருக்கும்.!

**பேரறிஞர் அண்ணா கண்ட**
**கழகம் வாழ்க...வெல்க!**
**அண்ணா புகழ் ஓங்குக!!**

---

# அண்ணாவுடனான சந்திப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின்



பேரறிஞர் அண்ணா அவர்கள் 60 வயதை அடைந்து மணிவிழா கொண்டாடுகின்ற காலம் அது. இளைஞர் தி.மு.க.வின் சார்பில் அண்ணாவை அழைத்து மணி விழாக் கொண்டாடிட திட்டமிட்டு, அண்ணா அவர்களை சந்திக்க, நுங்கம்பாக்கத்திலுள்ள அவரது இல்லத்திற்குச் சென்றேன். அந்த நேரம் அங்கே குழுமியிருந்த என்.வி.என்.. நாடாளு மன்ற உறுப்பினர் க. ராஜாராம் மற்றும் சிலர் என்னிடத்தில் என்ன விவரம் என விசாரித்துவிட்டு அண்ணாவுக்கு உடல் நலமில்லை. சந்திக்க இயலாது எனக் கூறி,என்னைத்திருப்பிஅனுப்பிவிட்டனர்.

சுருங்கிய முகத்தோடு வீடு வந்து சேர்ந்தேன். நான் வந்து சென்ற செய்தி அண்ணா அவர்களுக்குத் தெரிந்தவுடன், என்னை அழைத்து வரச்சொல்லி அவரது காரையே கோபாலபுரத்திற்கு அனுப்பி வைத்தார்.

அண்ணா என்னை அழைத்தார் என்ற செய்தி கேட்டு அவரது பரந்து விரிந்த விசால மான இதயத்தில் இந்தச் சிறுவனுக்கும் ஓர் இடம் இருக்கிறதே என எண்ணி மகிழ்ச்சியில் திளைத்தேன். அந்தக் காரில் நான் அண்ணாவின் வீடுச் சென்று அவரைச் சந்தித்தபோது, ஏன்? வந்து விட்டு பார்க்காமல் சென்றுவிட்டாய்? எனக் கேட்டார். தாங்கள் உடல் நலமில்லாததால் பார்க்க முடியாது எனச் சொல்லிவிட்டனர், சென்றுவிட்டேன் என்றேன்.

அவர்கள் சொன்னால் நீ சென்று விடுவதா? எனக்கேட்டு மேலும், வந்த விசயம் என்ன? எனக் கேட்டார்.

கோபாலபுரம் இளைஞர் தி.மு.க. சார்பில் தங்களுக்கு மணிவிழாக் கொண்டாட வேண்டும். அதற்குத் தாங்கள் நாள் ஒதுக்கித் தரவேண்டும். அதற்காகத்தான் வந்தேன் என்றேன்.சரி, தேதி பின்னர் தருகிறேன்.

போய்விட்டுப் பிறகு வா என்றார். இல்லை, இப்போதே தேதி கொடுங்கள். மணி விழாவை சிறப்பாகக் கொண்டாடவேண்டும் என்றேன். என்ன? உன் அப்பனைப் போலவே பிடிவாதமாக இருக்கிறாய் என அன்போடு கேட்டு விட்டு தேதியும் ஒதுக்கித் தந்தார்.



இந்த விழாவில் பங்கேற்று அண்ணாவுக்கு பொன்னாடை போர்த்த வேண்டுமென சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களையும் அழைத்தேன். ஒப்புதல் அளித்தார்கள். விழா ஏற்பாடுகளை இளைஞர் தி.மு.க. சார்பில் தீவிரமாகவும். ஆர்வமாகவும் செய்து கொண்டிருந்தோம்.

நான் சந்தித்து வந்த சில நாட்களுக்குப் பிறகு அண்ணா நோய் வாய்ப்பட்டு சிகிச்சைக்காக அமெரிக்கா சென்று விட்டதால் அந்த விழா நடத்த இயலாமலே போய்விட்டது. என் ஆசை நிராசையாகிவிட்டது.

அந்த விழா நடத்த இயலாமல் போய்விட்டதே என்ற ஏக்கமும் வருத்தமும் இன்னமும் என்னால் மறக்க முடியவில்லை - எனினும் ஓராண்டு முழுவதும் அண்ணாவின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிட நெல்லையில் நடைபெற்ற இளைஞர் அணி மாநாட்டில். ஆலோசனையை முன்மொழிகின்ற வாய்ப்பைப் பெற்றேன் என்பதை எண்ணிப் பூரிப்பும். பெருமையும் அடைகின்றேன்.

**அண்ணாவை சந்தித்தது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின்**

**அண்ணா நூற்றாண்டு நிறைவு மலர் 2009**



★ **தமிழ்ப்பண்பாடு!**

உலகத்தில் எல்லா மனிதர்களையும் சகோதரர்களாகவும், தோழர்களாகவும் ஏற்றுக் கொள்ளும். தன்னிடம் வருபவர்களை வாழ்த்தி வரவேற்கும். எந்த மொழியையும் உரிய முறையில் மதிக்கும். அறிவுச் செல்வம் உலகின் எந்தக் கோடியில் இருந்தாலும் தேடிச் சென்று எடுத்து வரும், ஆனால்,தமிழர்கள் தமக்கென்று உள்ளதை ஒருக்காலும் இழக்கச் சம்மதிக்க மாட்டார்கள்.!

★ **வறுமை!**

ஒரு சமுதாயத்தில் உடையான் இல்லான் என்ற இருவேறு வர்க்கங்கள் இருக்கும் வரை வறுமையும் இருந்தே தீரும்!

★ **ஞானப்பால்!**

ரேடியோவும் டெலிபோனும் ஒலி பெருக்கியும் மின்சாரமும் ஞானப்பால் உண்டதால் வந்த வல்லமைகள் அல்ல, அசரீரி அடி எடுத்துக் கொடுத்ததால் உண்டான அற்புதங்களுமல்ல; தன்னலமற்ற அறிவாளிகளின் உழைப்பால் விளைந்த உன்னதப் பொருள்கள் அவை!

★ **அரசியல் மரபு!**

நல்ல அரசியல் மரபை உண்டாக்கவும், உண்மை ஜனநாயகம் மலரவும், எல்லா அரசியல் கட்சியினரும் பாடுபட வேண்டும்.!

★ **மனித நீதி!**

மனித நீதி, அரச நீதியைவிடப் பெரியது; அதுதான் அரச நீதிகளை அவ்வப்போது மாற்றியும் திருத்தியும் வருவது!

**- அண்ணா**